இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 14-08-2024

# தமிழக முதல்வரின் தமிழ்ப் புதல்வர்கள்

**“என்னரும் தமிழ்நாட்டின் கண்**
**எல்லோரும் கல்வி கற்றுப்**
**பன்னரும் கலை ஞானத்தால்**
**பராக்கிரமத்தால் அன்பால்**
**உன்னத இமய மலை போல்**
**ஓங்கிடும் கீர்த்தி எய்தி**
**இன்புற்றார் என்று மற்றோர்**
**இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?”**

- என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஏக்கத்துடன் பாடினார். புரட்சிக் கவிஞரின் ஏக்கம் போக்கும் அரசாக திராவிட மாடல் அரசை வடிவமைத்து செயல்படுத்திக் காட்டி வருகிறார் மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

* நான் முதல்வன்
* புதுமைப் பெண் - ஆகிய திட்டங்களின் தொடர்ச்சியாக தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**ஏராளமான தொழில்கள் தமிழ்நாட்டில் தொடங்கப்படுகிறது. அப்படி தொடங்கப்படும் நிறுவனங்களில் பணியாற்ற தகுதி படைத்த தமிழ் நாட்டு மாணவர்களை உருவாக்குவதற்கான மகத்தான திட்டம்தான், ‘நான் முதல்வன்’ திட்டம் ஆகும். அனைத்து மாணவர்களையும் அனைத்துத் திறமைகளிலும் முதல்வன் ஆக்கும் திட்டம் இது. தமிழ்நாட்டு இளைய சக்தியை அறிவு சக்தி யாக, அனைத்து ஆற்றல்களும் கொண்ட சக்தியாக உயர்த்தும் திட்டம் இது. கடந்த மூன்றாண்டு காலத்தில் இதுவரை 28 லட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ளார்கள். இதில் பல லட்சம் பேர் பல்வேறு பணிகளில் சேர்ந்துள்ளார்கள்.**

அரசு மற்றும் தனியார் வேலை வாய்ப்புகள் கடந்த மூன்றாண்டு காலத்தில் 1.25 லட்சம் உருவாக்கப்பட்டு, அதில் இளைஞர்கள் சேர்ந்துள்ளார்கள். புதிய தொழில் முதலீடுகள் காரணமாக சுமார் 14 லட்சம் வேலை வாய்ப்புகளை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்கள்.

இதன் இன்னொரு சிந்தனைதான் புதுமைப் பெண்ணும், தமிழ்ப் புதல்வனும் ஆகும். அரசுப் பள்ளியில் படித்து, கல்லூரிக் கல்விக்குள் வரும் மாணவர்களுக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 3 இலட்சத்து 28 ஆயிரம் மாணவிகள் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். இத்திட்டத்தினால் உயர்கல்வியில் முதலாமாண்டு சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது. இது சாதாரணமான சாதனை அல்ல. உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கி வருவதன் மூலமாக ஏராளமான நன்மைகள் ஏற்பட்டுள்ளது. பெண்கள் ஏராளமாக படிக்க வருகிறார்கள் என்பது மட்டுமல்ல, இளம் வயது திருமணங்கள் குறைந்துள்ளது. இடைநிற்றல் குறைந்துள்ளது. மாணவியரின் சமூகப் பங்களிப்பு அதிகமாகி உள்ளது. இதே திட்டத்தை மாணவர்களுக்கும் சேர்த்து விரிவுபடுத்தி உள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக மாணவியர், ஆயிரம் ரூபாய் பெற்றதைப் போல மாணவர்களும் பெறப் போகிறார்கள். இந்தத் திட்டம் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து தேர்ச்சி பெற்றவர்களுக்கும், அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்து தேர்ச்சி பெற்றவர்களுக்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் 3 இலட்சத்து 28 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்த ஆண்டிற்கு 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். கோவை கல்லூரியில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று திட்டத்தை தொடக்கி வைப்பதற்கு முந்தைய நாளே, இத்திட்டப் பயனாளிகள் அனைவரது வங்கிக் கணக்கிலும் ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டு விட்டது. ‘எப்ப வருமோ’ என்ற ஏக்கமில்லை. திட்டத்தை தொடங்குவதற்கு முன்பே, கொடுத்துவிட்டார் முதலமைச்சர் அவர்கள். இது போன்ற திட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எத்தகைய உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் இருக்கிறார் என்பதற்கு இது ஒரு உதாரணம் ஆகும்.

**மாணவர்களுக்கு இனி பொருளாதாரக் கவலை இல்லை என்ற சூழலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி விட்டார்கள். இனி நான் என் பெற்றோரை எதிர்பார்க்கத் தேவையில்லை, புத்தகம் வாங்க பயன்படுத்திக் கொள்வேன், என் அறிவை விரிவு செய்ய பயன்படுத்திக் கொள்வேன், எனது விடுதிக் கட்டணத்துக்கு இது பயன்படும், பேருந்து பயணத்துக்கு பயன்படும், இதனால் எனது பெற்றோரின் சுமை குறையும், பகுதி நேரமாக வேலை பார்த்தபடியே படித்த எனக்கு இனி அந்தத் துன்பம் இல்லை, தேர்வுக் கட்டணம் செலுத்த இது பயன்படும் - இப்படி ஒவ்வொரு மாணவரும் தங்களுக்கு இந்தத் திட்டம் எப்படிப் பயன்படும் என்பதைச் சொல்லி இருக்கிறார்கள்.**

‘எனது பெற்றோரை இனி கஷ்டப்படுத்த மாட்டேன்’ என்பது அனைத்து மாணவர்களது குரலாகவும் இருக்கிறது. தமிழ்நாட்டில் யாரும் எதன் பொருட்டும் துன்பம் அடையக் கூடாது என்று சிந்திப்பவராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்தின் கவலையையும் தீர்ப்பவராக முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ‘கல்வி பெற எதுவும் யாருக்கும் தடையாக இருக்கக் கூடாது’ என்பதை தொடர்ந்து சொல்லி வரும் முதலமைச்சர் அவர்கள், அந்தத் தடைகளை உடைக்கும் திட்டங்களைத்தான் உருவாக்கி வழங்கி வருகிறார்கள்.

**தமிழ்நாட்டின் அருந்தவப் புதல்வராம் மாண்புமிகு முதலமைச்சரின் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் புரட்சிக் கவிஞர் சொன்னாரே, ‘எந்நாளோ’ என்ற ஏக்கம் துடைப்பதாக அமையும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.08.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நகராட்சி நிருவாக இயக்குநரகம், பேரூராட்சிகள் இயக்குநரகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்ட 144 நபர்களுக்கும், கருணை அடிப்படையில் நகராட்சி நிருவாக இயக்குநரகம், பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகியவற்றில் 27 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பத்திரிகைகள் பாராட்டும் கோவை ஆத்துப்பாலம் - உக்கடம் உயர்மட்டப் பாலம்!

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் உண்மைக்குப் புறம்பாக பேசுவதா?

## அமைச்சர் எ.வ.வேலு காட்டமான பதில்!

சென்னை, ஆக. 14 - “பத்திரிகைகள் பாராட்டுகிற கோவை ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்கார வீதி வரையிலான உயர்மட்டப் பாலம் குறித்து அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வேலுமணி உண்மைக்குப் புறம்பாக பேசுவதா?” என்று பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு காட்டமான பதிலடி கொடுத்துள்ளார்.



கோவை ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பனக்கார வீதிவரை உயர்மட்டப் பாலம் குறித்து, முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் வேலுமணியின் உண்மைக்குப் புறம்பான செய்திகளுக்கு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பதிலடி கொடுத்து விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

கோவை ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பனக்கார வீதி வரை, உயர் மட்டப்பாலம் அமைக்கும் திட்டம் கடித எண்.23504/திட்டம்1, 2010 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கருத்துரு உருவாக்கப்பட்டது.

பாலக்காடு, பொள்ளாச்சி மற்றும் ஒப்பணக்கார வீதி சாலைகளில், அதிகப் போக்குவரத்துச் செறிவு (CPU) இருந்ததாலும், உக்கடம் பகுதியில், போக்குவரத்து நெரிசல் மிக அதிகமாக இருந்ததாலும், இத்திட்டத்தைச் செயல்படுத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**கோவை மக்களிடம் அக்கறை காட்டாத வேலுமணி!**

14.11.2011இல் மாவட்ட ஆட்சியர் கூட்டத்தில், உயர் மட்டப்பாலம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் இத்திட்டத்தை செயல்படுத்த மனம் இல்லாமல், ஏழு ஆண்டுகாலம் காலதாமதத்திற்குப் பின் 2.4.2018 அன்று பாலப்பணி தொடங்க ஒப்பந்தம் போடப்பட்டது. கோவை மாவட்டத்தில், மிகப்பெரிய அதிகார மையமாக செயல்பட்டு வந்த வேலுமணி, 7 ஆண்டு காலம் கோவை மாவட்ட மக்களின் மீது எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

10 ஆண்டுகாலம் காலதாமதத்திற்குப் பின் 2018-2019 ஆம் நிதியாண்டில், 24.1.2021 அன்று, உயர்மட்டப் பாலத்தினை நீட்டித்து, மீண்டும் பணி துவங்க ஒப்பந்தம் போடப்பட்டது.

**முதல்வர் மு.க.ஸ்டாலினின் விரைவான நடவடிக்கை!**

7.5.2021 அன்று, திராவிட மாடல் ஆட்சி முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கழக ஆட்சிப் பொறுப் பேற்றபோது. 12% சதவீத பாலப்பணிகள் மட்டுமே முடிந்து இருந்தன. முதலமைச்சர் அவர்கள், இப்பாலப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று என்னிடம் அறிவுறுத்தினார்கள். முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, பலமுறை கோயம்புத்தூர் தளத்திற்கே சென்று, ஆய்வுக் கூட்டங்களை நடத்தியதுடன், பொறியாளர்களுக்கும், ஒப்பந்ததாரர்களுக்கும் எந்தெந்த வகையில் பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என்று, அறிவுரைகள் வழங்கி செயல்படுத்தியுள்ளேன். என்னுடைய தொடர் நடவடிக்கையின் காரணமாக 88% சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டது. இப்பாலப்பணிக்கு சுமார் ரூ.318 கோடி நிதி திராவிட மாடல் ஆட்சியில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிந்துள்ளது.

சாலையைப் பயன்படுத்தக்கூடிய வாகன ஓட்டிகள் மற்றும் பொதுக்களின் கோரிக்கைகளை ஏற்று, போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், காலவிரயத்தைத் தவிர்த்து, பாதுகாப்பான பயணம் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் முதலமைச்சர் அவர்களால், 9.8.2024 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

**பத்திரிகைகள் பாராட்டு!**

இந்த உயர்மட்டப்பாலம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்துவிடப்பட்டது குறித்து, தினத்தந்தி, தினமலர், தினகரன், தி இந்து, தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், டைம்ஸ் ஆப் இந்தியா, மாலைமலர், மாலைமுரசு, தமிழ்முரசு, தமிழ் இந்து ஆகிய தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள் படத்துடனும் பாராட்டியுள்ளதைப் பொறுத்துக்கொள்ள முடியாத வேலுமணி, உண்மைக்குப் புறம்பானச் செய்திகளை, பேட்டியாக அளித்துள்ளார்.

தினமலர் தமிழ்ப் பத்திரிகை “நீட்டித்தது இ.பி.எஸ்.” “நிறைவேற்றியது மு.க. ஸ்டாலின்” எனப் பாராட்டி செய்தி வெளியிட்டுள்ளது அனைவரும் அறிந்த உண்மையே.

“காமாலை கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்” என்ற முது மொழிக்கேற்ப, கழக ஆட்சியால் பல பணிகள் செய்யப்பட்டுள்ளதை பாராட்ட மனமில்லை என்றாலும், குறை சொல்லாமல் இருந்திருக்கலாம்.

தற்போது, நடைபெற்று வரும் திருச்சி சாலை சுங்கம் பகுதியில், ஏறுதளம் மற்றும் இறங்குதளம் அமைக்கும் பணி 31.8.2024க்குள் முடிக்கப்படும். இப்பணி விரைவில் முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதையும் வேலுமணி அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### அனைத்துலக முத்தமிழ் முருகன்

# மாநாட்டிற்கான அரங்குகள் அமைக்கும் பணிகள்!

## அமைச்சர்கள் அர.சக்கரபாணி – பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

பழனி, ஆக. 14- உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (12.08.2024) பழனி அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி வளாகத்தில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்காக நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 2024 ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடைபெறுகிறது. இம்மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து முருக பக்தர்கள் ஆன்மிகப் பெரியோர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். இம்மாநாட்டிற்காக கல்லூரி வளாகத்தில் மாநாட்டு பந்தல், ஆய்வரங்கங்கள், அறுபடை வீடுகளின் அரங்கங்கள், சிறப்பு புகைப்படக் கண்காட்சி. வேல் அரங்கம், 3டி தொழில்நுட்பத்துடன் கூடிய காட்சியரங்கம், உணவுக்கூடங்கள் அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் பார்வையிட்டு அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும் அறிவுரைகளை வழங்கினர்.

இந்த ஆய்வின்போது, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தவத்திரு பேரூர் ஆதீனம் முனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், தவத்திரு சிரவை ஆதீனம் குமரகுருபர சுவாமிகள், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் அ.பிரதீப், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, தலைமை பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன், திரு. பொ.ஜெயராமன், திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி, திருமதி இரா.வான்மதி, எம்.கார்த்திக், செ.மாரிமுத்து, கண்காணிப்பு பொறியாளர் (தலைமையிடம்) ச.செல்வராஜ், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் க.சந்திரமோகன், அறங்காவலர்கள் ச.மணிமாறன், கே.எம்.சுப்பிரமணியன், ரா.ராஜசேகரன், திருமதி ஜெ.சத்யா மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில், இன்று (14.08.2024 - புதன் கிழமை) காலை 10 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: சிறுபான்மையின மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு புதிதாக கொண்டு வந்துள்ள வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவினை எதிர்த்தல் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து.

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர் -
கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

# கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், ஆக. 14 - கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் விளையாட்டுதுறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடலூர் மேற்கு மாவட்ட செயற்குழுக்கூட்டம் இன்று (14.08. 2024 - புதன்கிழமை) காலை: 10 மணியளவில் நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் டாகடர்.கொ.நந்தகோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெறுகிறது.



இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய கழக, நகரக் கழக, பேரூர் கழக, கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தொ.மு.ச. நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** 1. இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல்
2. மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல்
3. கழக ஆக்கப்பணிகள்